### இந்தியாவில் முதன்முறையாக

# மெட்ரோ ரெயில் நிறுவனங்களில் வேதியியல் தீங்கு இல்லாத கிருமிநாசினி

## பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்கு ஏற்பாடு

சென்னை, அக். 21–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் கூறி இருப்பதாவது:–

நோய்ப்பரவலைத் தடுக்கவும், பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் பல்வேறு நெறிமுறைகளை மத்திய, மாநில அரசுகளின் வழிகாட்டுதலின்படி சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

**கிருமிநாசினி**

ரெயில் பெட்டிகள் மற்றும் நிலையங்கள் அனைத்தும் கிருமிநாசினிகள் கொண்டு உரிய இடைவெளியில் தூய்மைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தூய்மைப்ப டுத்தும் போது இந்தியா விலேயே முதன் முயற்சி யாக வேதியியல் தீங்கு விளைவிக்காத நீர்வடிவிலான கிருமிநாசினியை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பயன்படுத்துகிறது.

**நோய் பரவலை தடுக்கிறது**

இடிஏ நுட்பம் மூலம் வெளிப்படும் பிராணவாயு கலந்த நுண்ணிய நிறமற்ற திரவ வடிவிலான கிருமிநாசினிகள், வேதியியல் தன்மையை முற்றிலும் தவிர்க்கிறது. இந்த கிருமிநாசினி பயன்படுத்தும் போது, கைகளில் மட்டுமல்ல சுற்றுப்புறப் பகுதிகளிலும் காற்றின் மூலம் கிருமிகள் மற்றும் வேதி பரவலை தடுக்கிறது. அதிநவீன மருத்துவமனைகள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளில் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த இந்த தொழில்நுட்பத்தை இந்தியாவில் உள்ள மெட்ரோ ரெயில்கள் மற்றும் மெட்ரோ நிலையங்களுக்கு ஏற்ப செறிவூட்டப்பட்டு பயணிகளின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தி வருகிறது.

**பாதுகாப்பானது**

இந்த தொழில்நுட்பம் வழக்கமான குளோரின் பயன்பாடுகளை விட 51 சதவீதம் கூடுதல் பாதுகாப்பானது ஆகும்.

நுண்ணுயிர்க் கொல்லி– தீவிரமாக செயல்படக்கூடியது. கிருமிகள் கொல்லப்படும் போது வெளிப்படும் நச்சுகளைத் தடுக்கும்.

கிருமிக்கொல்லி – நீர்த்துவளைகளில் வெளிப்படும் கிருமிகள் மட்டுமல்ல, சுற்றுப்பறங்களில் காற்றில் கலந்த கிருமிக்ளையும் கொல்லக்கூடியது. பயன்பாட்டின் போது கைகள் மற்றும் உடல் உறுப்புகளில் தாக்கினாலும் அதனால் தீங்கு விளைவிக்காது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.